**லங்கா சோல்ட் லிமிடட் கம்பனி -2019**

------------------------------------------------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-----------------------------------------

லங்கா சோல்ட் லிமிடட் (''கம்பனி'') நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

-------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நியமத்தின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் உயிரியல் சொத்துக்கள் நிதிநிலைமைக் கூற்றில் வரிசைப்படுத்தப்பட்ட உருப்படியாக உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக கம்பனியின் ரூபா 29,194,415 தொகையான உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நிதிநிலைமைக்கூற்றில் தனியாக வரிசைப்படுத்தப்பட்ட உருப்படியாக காண்பிக்கப்பட வேண்டுமென்பதில் இணங்குகின்றேன். 2020 இன் இறுதிக்கணக்குகளினை தயாரிக்கும் போது இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம்உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நிதிநிலைமைக்கூற்றில் வரிசைப்படுத்தப்பட்ட உருப்படியாக உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நியமத்தின் 13.4 ஆம் பிரிவின் பிரகாரம் தேறிய இற்றைப் பெறுமதி அல்லது கிரயம் ஆகிய பெறுமதிகளில் குறைவான பெறுமதிக்கு இழப்பு பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும்,கம்பனியினால் இருப்புக்களின் தேறிய இற்றைப் பெறுமதி மதிப்பிடப்படாதிருந்ததுடன் கிரயம் ரூபா 490,455,118 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடத்தினதும் இறுதித் திகதியில் உள்ளபடியான இருப்பு தொடர்பில் விரிவான அறிக்கையொன்றினை பெற்று அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு உரிய நடைமுறையினுள் தேறிய இற்றைப் பெறுமதி மற்றும் கிரயம் ஆகிய இரு பெறுமதிகளில் குறைவான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இருப்பு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இருப்புக்களின் தேறிய இற்றைப் பெறுமதி அல்லது கிரயம் ஆகிய இரண்டில் குறைவான பெறுமதியில் இருப்பு பெறுமதியிடப்பட வேண்டும். |
| (இ) கம்பனியினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 269 மில்லியன் செலவிடப்பட்டு வெளிவாரி தரப்பினரிடம் | இது தொடர்பில் வெளிப்படுத்தவதற்கு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் | நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை அடிப்படையாகக் |

கொள்வனவு செய்யப்பட்டிருந்த கைத்தொழில் உப்பு 13,515 மெற்றிக் தொன் அளவின் மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான உப்பு 8,149 மெட்ரிக் தொன் எஞ்சியிருந்தது. குறைந்த தரமுடையது எனும் காரணத்தினால் உற்பத்தி காரணிகளுக்காக பயன்படுத்த முடியாது 2020 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த எஞ்சிய உப்பின் இருப்பானது இற்றைப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட ரூபா 117,620,882 தொகையான அழிவு நட்டம் விரிவான வருமானக் கூற்றின் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த இருப்பின் புதிய மதிப்பீட்டுப் பெறுமதி தேறிய இற்றைப் பெறுமதி அல்ல என்பதனால் இதனை மதிப்பீடு செய்தலில் உள்ள துல்லியம் தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது. சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 13.22 ஆம் பிரிவின் பிரகாரம் இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறானவை தொடர்பில் முழுமையான வெளிப்படுத்தலை மேற்கொள்வதற்கு இணங்குகின்றேன்.

கொண்டு இருப்பினை மதிப்பீடு செய்தல் இடம்பெற வேண்டும் என்பது தொடர்பில் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அபிப்பிராயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கோலங்கல லேவாயவினை நிர்மாணிக்கும் பணிகளின் போது காணிகளினை அகழும் போது அகற்றப்படும் மணல் மற்றும் மண் ஆகியவற்றுக்காக உடன்படிக்கையின் பிரகாரம்தனியார் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக கிடைத்திருந்த முறையே ரூபா 6,447,500 தொகை, ரூபா 3,217,100 மற்றும் ரூபா 1,285,500 தொகையான வருமானம் அந்தந்த வருடங்களின் போது செலுத்த வேண்டிய செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 10,950,100 தொகை நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2019 ஆண்டிற்குரிய புதிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,715,000 தொகையான வருமானம் முழுமையாக கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | இந்த பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் எடுப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | வருமானம் மற்றும் செலவினம் சரியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா | | | |
| (அ) | உதவி மற்றும் மானியங்கள் | 29,135,522 | விபரங்கள் உள்ளடங்கப்பட்ட ஆவணங்கள் | குறித்த தகவல்கள் முன்னாள் நிறுவன கணக்காய்வினை | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதிகளுக்குரிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மற்றும் ஏனைய சான்றுப்படுத்தல் களுக்கான பதிவேடு | மேற்கொண்ட கணக்காய்வாளர்களு க்கு வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்களினை தேடிக்கண்டறிய முடியாதுள்ளது. | சான்றுப்படுத்தல்கள், சாட்சிகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்ததாரருக் கு செலுத்த வேண்டிய | 38,360,509 | ஒப்பந்த உடன்படிக்கைக ள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கள் | இந்த நிர்மாணங்கள் உரிய நியமத்திற்கு அமைய இடம்பெற்றிராமையின ால் அந்த பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதிகளுக்குரிய சான்றுப்படுத்தல்கள், சாட்சிகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டிய வியாபாரக் கணக்குகள் | 61,977,265 | மீதி உறுதிப்படுத்தல் கள் | குறித்த கடன் கொடுத்தோருக்கு இதுவரையிலும் கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதிகளுக்குரிய சான்றுப்படுத்தல்கள், சாட்சிகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனா ன தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 87(5) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.9.3 ஆம் பிரிவு | கம்பனியினால் 2019 ஆம் ஆண்டின் போது 2017 ஆம் ஆண்டிற்காக இலாபப் பங்குகள், பங்கிலாபம் அறிவிக்கப்பட்டு பங்கிலாபத்தின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் வரி செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உள்ளடங்கலான பங்கிலாப உரித்தாளர்களுக்கு பங்கிலாப சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் ஊழியர் | நிறுவனத்தின் நிதிநிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி சபைக்கு செலுத்த வேண்டியப ங்கிலாப பெறுமதியினை தவணைகளில் அல்லது முழுமையாகத் செலுத்தி முடிப்பதற்குஇணக்கப்பா ட்டினை வெளியிடுகின்றோம். | பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபைக்கு உரித்துடைய ரூபா 59,307,807 தொகையான பங்கிலாபத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஊழியர் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | ஊழியர் நலன்புரி நிதியத்திற்காக ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்படும் 8 சதவீத பங்களிப்பினை அதிகரிப்பதற்காக சேவை வழங்குனரினால் தொழிலாளர் ஆணையாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், கம்பனியினால் அந்த அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது கம்பனியின் நிரந்தர ஊழியர்களின் உழைப்பின் அடிப்படையில் அந்த சதவீதத்தினை 10 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தினை கூட்டுத்தாபனமாக நிலவிய காலப்பகுதி முதல் ஊழியர்களிடமிருந்து அவர்களின் உழைப்பின் அடிப்படையில் 10 சதவீதத்தினை அறவிடுதல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் எதிர்காலத்தில் சட்டரீதியான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். | பங்களிப்பு சதவீதத்தினை அதிகரித்தல் தொடர்பில் ஊழியர் நலன்புரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 3.2 ஆம் பிரிவு | கம்பனியின் நிறைவேற்று பணிப்பாளர்களின் உச்ச எண்ணிக்கையினை முழு நேர தலைவர் உள்ளடங்கலாக இருவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட போதிலும், அதற்கு முரணாக 2019 ஆம் ஆண்டின் போது லங்கா சோல்ட் கம்பனியின் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் எனுமாறு நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மூவர் நியமிக்கப்பட்டிருந்தனர். | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்தது 2020 சனவரி மாதத்தில் இடம்பெற்ற 430 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்திலாகும். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து அரச கம்பனிகளாலும் பின்பற்றப்பட வேண்டிய வேண்டும் என்பதனால் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 7.4.5 ஆம் பிரிவு | மதிப்பாய்வு சபை நியமிக்கப்பட்டு ஆண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் தொடர்பான மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | நிலையான சொத்துக்கள் தொடர்பான குழுவொன்று நியமிக்கப்பட்டு மதிப்பாய்வு பணிகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 9.2, 9.3.1 மற்றும் 9.14 ஆம் பிரிவு | கம்பனியின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் கம்பனியினால் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு நடைமுறை மற்றும் மனிதவள முகாமைத்துவத்துக்கான கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டது 2020 சனவரி மாதம் இடம்பெற்ற 430 பணிப்பாளர் சபை கூட்டத்திலாகும். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் அனைத்து அரச கம்பனிகளாலும் பின்பற்றப்பட வேண்டியதனால் சுற்றறிக்கையின்ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 3.1 ஆம் பிரிவு | (i) சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் தலைவருக்கு உரித்தான உச்ச மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 170 லீற்றர்கள் ஆகிய போதிலும், 2019 ஆம் ஆண்டின் போது 170 லீற்றரினை விஞ்சி எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்ட 5 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்காக பணிப்பாளர் சபையின் பரிந்துரையுடன் குறித்த | அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்தது 2020 சனவரி மாதம் இடம்பெற்ற 430 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்திலாகும். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | (1) மற்றும் (11) ஆம் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை அனைத்து அரச கம்பனிகளாலும் பின்பற்றப்பட வேண்டியமையால் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவினை வழங்கும் போது இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்திற்கு மேலதிகமாக குழாம் வாகனத்திற்குரிய கெப் வண்டியொன்றும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் எரிபொருள் நுகர்வு தொடர்பில் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | (ii) | நிறைவேற்று பணிப்பாளருக்கு பொறுப்புடைய உச்ச எரிபொருள் கொடுப்பனவான 150 லீற்றர்கள் காணப்பட்ட போதிலும்,கம்பனியினால் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக மாதாந்தம் 300 லீற்றர்கள் எல்லையொன்று நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2 ஆம் மற்றும் 3 ஆம் பிரிவுகள் | (i) | கம்பனியொன்றின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் நீங்கலாக ஏனைய நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லது எரிபொருளினை வழங்க முடியாத போதிலும், கம்பனியின் செயற்பாட்டுப் பணிப்பாளருக்கு மாதாந்த போக்குவரத்துப் படிகளாக ரூபா 30,000 | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபையை தீர்மானம் எடுத்தது 2020 சனவரி மாதம் இடம்பெற்ற அதன் 430 பணிப்பாளர் சபைக் கூட்டத்திலாகும். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் உத்தியோகபூர்வ | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் அனைத்து அரச கம்பனிகளாலும் பின்பற்றப்பட வேண்டியமையால் உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் மற்றும் எரிபொருள் படிகளை வழங்கும் போது இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மாதாந்தம் 100 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, கம்பனியின் மேலும் ஒரு பணிப்பாளருக்கு 2019 ஆம் ஆண்டின் போது உத்தியோகபூர்வ உந்துருளியொன்று மற்றும் மாதாந்தம் 30 லீற்றர் எரிபொருள் படியும் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் எரிபொருள் வழங்குதல் நிறுவனத்தின் கொள்கையின் பிரகாரம் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |
| (ii) | கம்பனியினால் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியின் கட்டமைப்பினை தயாரித்து குறிப்புரைக்கப்பட்ட வாகன மற்றும் எரிபொருள் படிகளினை உரித்துடைய பதவிகள் இனங்காணப்பட்டு 13 உத்தியோகத்தர்களுக்கு கம்பனியின் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன். அவர்களுக்காக மாதாந்தம் 125 முதல் 250 வரையிலான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள 13 உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக கம்பனியின் முகாமையாளர் உதவி முகாமையாளர்கள், மற்றும் எழுதுவினைஞர்கள் உள்ளடங்கலாக பதவியணியினர் 20 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பேர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களாக கம்பனியின் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் 8 முதல் 45 லீற்றர்கள் வரையிலான கம்பனியினால் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே தனியார் 2 தனியார் கார்கள் மற்றும் 25 தனியார் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்காக கம்பனியின் 27 பேர்களுக்கு மாதாந்தம் 8 முதல் 60 லீற்றர்கள் வரையிலான எரிபொருளும் கம்பனியினால் வழங்கப்பட்டிருந்தது. மேலும் மேற்படி 47 உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் உள்ளடங்கலான எரிபொருள் கம்பனியினால் வழங்குவதற்குரிய அங்கீகாரங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய பீஈடீ:1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு வழங்கப்படக்கூடிய மாதாந்த போக்குவரத்துப் படியானது ரூபா 50,000 ஆன போதிலும், கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 100,000 படி மாதாந்தப் போக்குவரத்துப் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு வருடத்திற்கு கூடுதலாக செலுத்தப்பட்ட போக்குவரத்துப் படிகள் ரூபா 600,000 ஆக இருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

(ஊ) 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் ''எவ்'' (கு) உப தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கம்பனியொன்றாக இக்கம்பனியினால் அதன் தலைவரின் மற்றும் பணிப்பாளர் சபையின் மாதாந்த கொடுப்பனவுகளுக்காக வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனினும், கம்பனியினால் குறித்த பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரங்களினை பெற்றுக்கொள்ளாது கம்பனியின் தலைவருக்கு, நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர்களுக்கு முறையே ரூபா 115,000 ரூபா 80,000 மற்றும் ரூபா 40,000 படி மாதாந்தப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும், சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போட்டி சந்தை விகிதம் அங்கத்தவர்களின் கல்வி மற்றும் திறன்களின் மட்டத்தினை கருத்தில் கொள்ளாது குறித்த படிகள் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. | அரச கம்பனி, திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும் என்பதால் அந்த சுற்றறிக்கைகளிலிருந்து திரண்டு செயற்படும் போது குறித்த திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 2.5 மற்றும் 2.11 ஆம் பிரிவு | கம்பனியின் தலைவர் உள்ளடங்கலான பணிப்பாளர் சபைக்கு மேலதிக படிகளை மேற்கொள்ள முடியாத போதிலும், கம்பனியின் தலைவருக்கு 2019 சனவரி முதல் ஒக்தோபர் மாதம் வரையிலும் மாதாந்தம் 10,000 | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு பணிப்பாளர் சபையின் தீர்மானம் தந்து அதன் 2020 சனவரி மாதம் இடம்பெற்ற 430 ஆவது | அரச கம்பனிகள் திறைசேரியின் பொது முயற்சிகள் திறைசேரியின் ஏற்பாடுகளுக்கு இணங்க வேண்டும்என்பதால் அந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படி களியாட்டப்படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலும் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு பணிப்பாளர் சபையின்கூட்டத்திற்கு வருகை தந்தமைக்காக செலுத்தப்படும்படியான (Sitting Allowance) இற்காக தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர்களுக்கு உரித்தற்ற போதிலும், கம்பனியினால் அதற்கு முரணாக மீளாய்வாண்டினுள் ரூபா 625,000 கூட்டுத்தொகையான படிகள் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக வருகை படிகளாக தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர்களுக்கு அவர்களின் மாதாந்த படிகளுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபைக் கூட்டத்திலாகும். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளிலிருந்து விலகி செயற்பட்டால் அதற்காக குறித்த திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடி 03/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | (i) கம்பனி 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2.8 மில்லியன் நட்டமொன்றினை அறிக்கையிடப்பட்டுள்ளமையால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்தக்கூடிய உச்ச ஊக்குவிப்புபடித் தொகை ரூபா 3,000 ஆன போதிலும், 2019 ஏப்ரல் மாதத்தின் போது அதன் ஊழியர்களுக்கு ரூபா 25,000 படி ரூபா 44,599,211 தொகை ஊக்குவிப்புப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ‘வருடாந்த ஊக்குவிப்புப் படிகள்’ ஆக மீண்டும் ரூபா | பொது முயற்சிகள் சுற்றறிக்கை பின்பற்றப்படுவதாக பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்தது 2020 சனவரி மாதம் இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திலாகும். ரூபா 5,453,044 இற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. | அரச கம்பனிகள் திறைசேரியின் பொது முயற்சிகள் திறைசேரியின் ஏற்பாடுகளுக்கு இணங்க வேண்டும்என்பதால் அந்த சுற்றறிக்கைகளிலிருந்து விலகி செயற்பட்டால் அதற்காக குறித்த திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

5,453,044 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் இவ்வாறான நிலைமையின் கீழ் ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துவதற்காக விசேட அமைச்சரவை அங்கீகாரமொன்று மற்றும் திறைசேரியின் முன் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு முரணாக 2018 ஆம் ஆண்டின் போது கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் இறுதியில் நிறைவடையும் ஆண்டிற்கான 2.8 மில்லியனான கம்பனியின் வரிக்கு பின்னரான நட்டம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 262.16 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறு உள்ளபோது 2019 ஆம் ஆண்டிற்கான | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்று வருடாந்த ஊக்குவிப்பு படியினை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்ததுடன் அந்த அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடாந்த ஊக்குவிப்புப் படிகளாக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 25,000 படி மற்றும் அமைய மற்றும் தவணை அடிப்படையிலான உத்தியோகத்தருக்கு ரூபா 15,000 படியும் ரூபா 32,138,109 தொகை 2020 மே மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு | கம்பனிக்காக ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கான பிரதான பெறுகைகள் திட்டமொன்று 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் பணிகளை விரிவாக காண்பிக்கும் வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 – 2020 வரையிலும் Cooperate Plan பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக பணிப்பாளர் சபைக்கு திருத்தத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டு அறிக்கைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதனால் குறித்த பெறுகைகள் திட்டம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கமுடியாது போனது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 262,162,026 ஆன நட்டமானதுடன் அதற்கு ஒத்ததாக கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 2,826,496 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுகைகளில் ரூபா 259,335,530 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை கிரயம் ரூபா 514,998,485 இனால் அதாவது 45 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹா லேவாய, பலப்புத்தான மற்றும் புந்தல உப்பளங்களில் பிரதான களஞ்சியங்களில் 02 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத ரூபா 13,252,123 பெறுமதியான நுகர்வுப் பொருட்களின் இருப்பொன்று காணப்பட்டது. | இந்த இருப்பில் ரூபா 7.2 மில்லியனான இருப்பானது 2015 ஆம் ஆண்டின் போது இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டது. எஞ்சிய ரூபா 5 மில்லியன் பெறுமதியான பொருட்கள் இருப்பிற்கான மதிப்பாய்வு சபையினை நியமிக்கப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத இருப்பாக இனங்காணப்பட்டு இலாபத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் தேவைப்பாட்டின் பிரகாரம் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கும் சிறந்த இருப்புக் கட்டுப்பாடொன்றினை பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் கொந்தல உப்பளம் மற்றும் மஹா உப்பளத்தில் பேணிச் செல்லப்படும் தெங்கு பயிர்ச் செய்கை 2017, 2018, 2019 ஆகிய வருடங்களின் போது முறையே ரூபா 7,716,287, ரூபா 7,333,563 மற்றும் ரூபா 7,531,405 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், குறித்த ஆண்டுகளின் போது உழைக்கப்பட்ட வருமானம் முறையே ரூபா 198,900 ரூபா 282,713 மற்றும் ரூபா 225,750 ஆக இருந்தது. இதன் பிரகாரம் தெங்கு பயிர்ச்செய்கையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட | தெங்கு பயிர்ச்செய்கையினுள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய வருமானமொன்றை பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியாக கம்பனி கவனம் செலுத்துவதுடன் கடந்த வருடங்களை விட ஊழியர் கிரயம் குறைவடைந்துள்ளது. மேலும், தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பினுள் மேலதிகமாக ஏனைய பயிர்களினை | வருமானத்தை அதிகரிப்பதற்கு மற்றும் செலவினத்தை ஆக்கபூர்வதாக மேற்கொள்வதற்கும் முகாமைத்துவம் செயலாற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த வருமானம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும், இந்த நிலைமைக்கு காணப்பட்ட விடயம் தொடர்பில் தேடியறிந்து வருமானத்தினை அதிகரிப்பதற்கு அல்லது செலவினைக் குறைப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | வளர்ப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது கம்பனியின் பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர், நிதி மற்றும் செயற்பாட்டு கண்காணிப்பு முகாமையாளர், சிரேஷ்ட கிரய முகாமையாளர், இரசாயனம் மற்றும் விற்பனை முகாமையாளர் ஆகிய சிரேஷ்ட முகாமையாளர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் உப்புக்கான பற்றாக்குறையொன்று காணப்படுகின்றமையால் வெளிவாரித் தரப்பினரடமிருந்து உப்பினை கொள்வனவு செய்வதற்கு முன்மொழிவொன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்போது கம்பனிக்கு சொந்தமானதாக காணப்பட்ட உப்பின் இருப்பானது எதிர்வரும் சந்தைத் தேவைப்பாடு, காலநிலை நிலைமைகள் உள்ளடங்கலான உற்பத்தி பிரச்சினைகள், உப்பின் விலைகள் ஆகிய விடயங்களை கருத்திற் கொண்டு உப்பின் பற்றாக்குறை தொடர்பில் அந்த இருப்பினைப் பெற்றுக்கொள்ளாமையால் கம்பனிக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பில் மதிப்பாய்வு அறிக்கையொன்று குறித்த உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், பணிப்பாளர் சபையினாலும் | பணிப்பாளர் சபையின் அறிவுரையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உப்பின் இருப்பினை விற்பனை செய்ய தேவையான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஒன்றினை ஏற்படாதிருக்க பொறுப்புடன் நடவடிக்கை எடுக்கின்றோம். | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு இருப்பை கொள்வனவை செய்வதற்கும் அவற்றினை சரியாக முகாமைத்துவம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அந்த விடயம் தொடர்பில் கவனத்திற் கொள்ளாது குறித்த பரிந்துரையினை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதி தலைவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டினுள் 4 சந்தர்ப்பங்களில் ரூபா 268.64 மில்லியன் செலுத்தி 13,515 மெற்றிக்தொன் உப்பு கம்பனியினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இரசாயன ஆய்வுகூட ஆராய்ச்சிகளின் பிரகாரம் குறைந்த தரத்திலானது என்பது சான்றுப்படுத்தப்பட்ட இந்த இருப்பினை விற்பனை செய்ய முடியாதுள்ளதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 141.59 மில்லியனான 7,136 மெற்றிக் தொன் அளவான உப்பு எஞ்சியிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இவ்வாறு எஞ்சியிருந்த உப்பின் இருப்பானது ஒரு மெற்றிக் தொன் ரூபா 6,177 படி ரூபா 44.07 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இருப்பிற்கான இருப்பு நட்டமாக ரூபா 117.62 மில்லியன் இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இந்த உப்பின் இருப்புக் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு குறித்த பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் எவ்வித நடவடிக்கையும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (இ) 1994 ஆம் ஆண்டு முதல் 30 வருட குத்தகைக் காலப்பகுதிக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மகா உப்பளத்தின் காணிகளுக்காக 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் குத்தகை உரித்துறுதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கோலங்கல மற்றும் கொந்தல உப்பளங்களின் காணிகளுக்கு குத்தகை கால எல்லை தொடர்பில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன் அந்த காணிகளுக்காக குத்தகை உரித்துறுதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த குத்தகை உரித்துறுதியைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய பணிகள் சில வருடங்களாக இன்றுவரை மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | சொத்துக்கள் சரியாக முகாமை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேசை உப்பு உற்பத்தி செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது இந்திய கம்பனியொன்றிடமிருந்து ரூபா 24,671,591 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 4 இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சுமார் 8 வருடங்களாக தொழிற்சாலையில் விளைவற்று வைக்கப்படட்டிருந்தன. | இந்த இயந்திரங்கள் 02 தடவைகளில் பயன்படுத்தப்படக் கூடிய மட்டத்தில் திருத்தியமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டதுடன் ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்குரிய அனைத்து வசதிகளும் இல்லாதிருந்தமையால் தொடர்ச்சியாக பயன்படுத்த முடியாதிருந்ததுடன் தற்போது பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தேவை உரிய முறையில் இனங்காணப்படாது சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும் அதனை சரியாக முகாமை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |